முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.04/2025**

**in**

**அசல் வழக்கு எண்.79/2022**

வராமுத்தேவர் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. வெள்ளத்துரை (இறப்பு)
2. செல்லச்சாமி
3. ராஜா
4. வட்டாட்சியர் அவர்கள்,
   மானூர்.
5. கிராம நிர்வாக அலுவலர்,
   நரிக்குடி. ... 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள்
6. சண்முகத்தாய்
7. சின்னத்தாய்
8. ராமலெட்சுமி ... 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ உத்தேச 6 முதல் 8 பிரதிவாதிகள்

இம்மனுவானது 20.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.S.வீரபுத்திரன் அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ரெங்கராஜன் அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:42:51 +0530

பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151–ன்படி, இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுவில் கண்ட 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் மனுவில் கண்ட விபரப்படி 6 முதல் 8 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து கொள்ள உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>** :–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் இவ்வழக்கை எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த நிலைமையில் இவ்வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் கடந்த 21.04.2025 தேதியில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான வெள்ளத்துரை என்பவர் 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு இம்மனுவில் கண்ட 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்றும், மேற்படி இறந்துபோன 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளான இம்மனுவில் கண்ட 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் 6 முதல் 8 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், ஆகையால், இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுவில் கண்ட 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் மனுவில் கண்ட விபரப்படி 6 முதல் 8 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுக்களின் 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:42:57 +0530

5) மனுதாரரால் இம்மனுவானது இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுவில் கண்ட 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் மனுவில் கண்ட விபரப்படி 6 முதல் 8 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரர் தரப்பில், இவ்வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் கடந்த 21.04.2025 தேதியில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான வெள்ளத்துரை என்பவர் 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு இம்மனுவில் கண்ட 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்றும், மேற்படி இறந்துபோன 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளான இம்மனுவில் கண்ட 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் 6 முதல் 8 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாய் உள்ளது காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 6 முதல் 8 வரையுள்ள எதிர்மனுதாரர்களை வாரிசாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதாலும், மேலும் இம்மனுக்களுக்கு 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:43:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.20 17:43:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.04/2025
in
O.S.No.79/2022
உத்தரவு (Draft / Fair)

நாள் : 20.02.2026